# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீடு எண் : 20/2020 நாள் : 18.03.2020

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு -IV (தொகுதி-IV-ல் அடங்கிய பதவிகள்) 2018-2019 மற்றும் 2019-2020 (Combined Civil Services Examination-IV (Group-IV Services) இல் அடங்கிய தட்டச்சர் பதவிக்கு 20.03.2020 முதல் 31.03.2020 வரையும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III பதவிக்கு 02.04.2020 முதல் 07.04.2020 வரையும் மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு நடைபெறும் என அறிவித்திருந்தது.

இந்நிலையில், மத்திய அரசு, கொரோனா வைரஸ் நோய் தொற்றை ஒரு தேசிய பேரிடராக அறிவிக்கை செய்துள்ளதாலும், தமிழக அரசு கொரோனா வைரஸ் பரவுதலை தடுக்க எடுத்துவரும் பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை கருத்திற்கொண்டும், மேற்படி நாட்களில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை-III ஆகிய பதவிகளுக்கான மூலச் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வானது தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கான மாற்று தேதியானது பின்னர் அறிவிக்கப்படும் .

மேலும், இதுகுறித்து விண்ணப்பதாரர்களுக்கு SMS மற்றும் email மூலமாக தனியே தகவல் தெரிவிக்கப்படும்.

செயலாளர்